**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ஆம் நாள்,**
**CC.152 /2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 12.11.2025-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராமன் | வயது | : | 55 |
| த.பெ | : | வாசுதேவன் | நிலை | : | **PW-4 (LW-10)** |

**A1,A2, A4 are present. A3 called absent. Defence counsel filed petition u/s. 317 - Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரனை -** நான் தற்போது சுத்துக்குளம் கேவிந்தசாமி தெருவில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்டும் 2-ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை சுமார் 10 வருடத்திற்குமுன்பு போட்டேன் எந்த இடத்தில் யார் எதற்காக வாங்கினார்கள் என்று ஞாபகமில்லை. 2-ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.6-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கேட்கப்பட்டதன் பெயரில் மேற்படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

சாட்சி சேட்டு (எ) ஐயனார் என்பவரை தெரியும். கடந்த 25-11-2011-ஆம் தேதி மாலை 4 மணிக்கு கடலூர் OT காவல் நிலைய குற்ற எண். 694/2011 இ.த.ச பிரிவுகள் 302,201. இவ்வழக்கின் எதிரியான ஆஜர் 2-ஆவது எதிரி தானாக ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றால் சரியல்ல, அதில் நானும் சாட்சி சேட்டு (எ) ஐயனார் ஆகிய இருவரும் சாட்சியாக இருந்தோம் என்றால் சரியல்ல, என்னை சாட்சியாக போலிசார் சேர்த்துள்ளார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் இவ்வழக்கின் 2-ஆவது எதிரி **ஸ்ரீ**காந்த் வழக்கு சம்பவத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும், எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -** வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**
**2025-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ஆம் நாள்,**
**CC.152 /2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 12.11.2025-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேட்டு (எ) ஐயனார் | வயது | : | 51 |
| த.பெ | : | கேசவன் | நிலை | : | **PW-5 (LW-11)** |

**A1,A2, A4 are present. A3 called absent. Defence counsel filed petition u/s. 317 - Cr.P.C, perused and allowed. Learned APP is Present.**

**அரசு தரப்பில் முதல் விசாரனை -** நான் தற்போது சுத்துக்குளம் சபாநாயகம் தெருவில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 2-ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை சுமார் 10 வருடத்திற்குமுன்பு போட்டேன் எந்த இடத்தில் யார் எதற்காக வாங்கினார்கள் என்று ஞாபகமில்லை. 2-ஆவது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.7-**ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கேட்கப்பட்டதன் பெயரில் மேற்படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அ.சா.4 ஜெயராமன் என்பவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 25-11-2011-ஆம் தேதி மாலை 4 மணிக்கு கடலூர் OT காவல் நிலைய குற்ற எண். 694/2011 இ.த.ச பிரிவுகள் 302,201. இவ்வழக்கின் எதிரியான ஆஜர் 2-ஆவது எதிரி தானாக ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றால் சரியல்ல, அதில் நானும் சாட்சி சேட்டு (எ) ஐயனார் இருவரும் சாட்சியாக இருந்தோம் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் இவ்வழக்கின் 2-ஆவது எதிரி **ஸ்ரீ**காந்த் வழக்கு சம்பவத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால்

அதுப்பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும் என்றாலும், எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -** வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**